தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2022–2023

## வளர்தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TEDC - FRANCE
TEDC - FRANCE

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

கிளைகள் இல்லாத மரங்களில் ஒன்று <u>வாழைமரம்</u>.
( ஆலமரம், வாழைமரம், பலாமரம் )

1. வன்னியை ஆண்ட மன்னர்களில் ஒருவன் ______________ .

   ( சங்கிலியன், பண்டாரவன்னியன், பாரி )

2. ஈபில்கோபுரம் அமைந்துள்ள இடம் ______________ .

   ( இலண்டன், கொழும்பு, பாரிசு )

3. நான் நேற்றுப் பாட்டுப் பாடினேன். நான் நாளை பாட்டுப்

   ______________ .

   ( பாடுவேன், பாடுவோம், பாடுகின்றேன் )

4. 15 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

   ( பதிநைந்து , பதினைய்ந்து, பதினைந்து )

5. பெரியோர் அறிவுரை ______________ போது நாம் அவற்றைக் கேட்க வேண்டும்.

   ( கூறும், காணும், பார்க்கும் )

6. மிக விரைவாகச் செல்லும் உந்து ______________ .

   ( சிற்றுந்து, பேருந்து, விண்ணுந்து )

TEDC

7. உனது கையில் நீ ________________ வைத்திருக்கின்றாய்?

( எப்படி, என்ன, எங்கே )

8. **ஒலிவட்டு:**

தமிழருடைய வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் ________________ .

( புறநானூறு, நல்வழி, ஆத்திசூடி )

9. ________________ சேர சோழ பாண்டிய நாடுகள் என மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது.

( தமிழகம், தமிழீழம், இலங்கை )

TEDC

10. கொய்யா + பழம் = ________________ .

( கொய்யாபழம், கொய்யாப்பழம், கொய்யாய்பழம் )

11. நெப்போலியன் கட்டிய வெற்றிவளைவில் ________________ வீதிகள் சந்திக்கின்றன.

( பத்து, பதினொன்று, பன்னிரண்டு )

TEDC

12. கடல்வாழ் உயிரிகளில் ஒன்று ________________ .

( இறால், எலி, முயல் )

13. சிறுவர்கள் மாடிப்படிகளில் ________________ என ஓடினர்.

( படபட, தடதட, மடமட )

14. காந்தள் என அழைக்கப்படும் பூ ________________ .

( மல்லிகைப்பூ, தாமரைப்பூ, கார்த்திகைப்பூ )

15. வாத்துகள் குஞ்சுகளுடன் தண்ணீரில் ________________ .

( மேய்கின்றன, நீந்துகின்றன, தொங்குகின்றன )

16. ________________ சேரரது கொடியாகும்.

( புலிக்கொடி, விற்கொடி, மீன்கொடி )

17. பறவை பறக்கும். அது போல தவளை ________________ .

( தத்தும், தாவும், ஊரும் )

18. காட்டில் நெல்லிக்கனியைக் கண்ட மன்னன் ________________ .

( அதியர்மான், பேகன், கயிலைவன்னியன் )

19. ________________ கொன்றைவேந்தன் என்ற நூல் எழுதப்பட்டது.

( ஔவையாரால், கபிலரால், வள்ளுவரால் )

20. ஆலும் ________________ பல்லுக்குறுதி.

( மாவும், பலாவும், வேலும் )

புள்ளிகள் 20

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

**எ - கா**

அண்ணா <u>வீட்டிலிருந்து</u> வேலை செய்கின்றார். ( வீடு )

1. மாணவர்கள் ____________________ விலங்ககத்துக்குச் சென்றனர். ( ஆசிரியர் )

2. மீன்கள் ____________________ வாழும். ( கடல் )

3. இது ____________________ நூல். ( அவன் )

4. புலவர் ____________________ வாழ்த்திப் பாடினார். ( மன்னன் )

5. அறிவொளி ____________________ ப் பழம் கொடுத்தாள். ( கிளி )

TEDC

புள்ளிகள் 10

**3) பொருத்தமான முடிக்கும் சொல்லைக் கண்டறிந்து கட்டத்திலும் கோட்டிலும் எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ப | | உ | | பா | |
| எ | றி | | த | | ர் | |
| | | | வு | ஓ | த் | |
| | | | | டு | த | |
| | | | | | ன | |
| | | கு | டி | | | |

(எ - கா)

மான்கள் சிங்கத்தைப் பார்த்தன.

1. சிறுவர் பந்தை ________________ .

2. நாம் பிறருக்கு ________________ .

3. சிறுமி மலர்களைப் ________________ .

4. குழந்தை பால் ________________ .

5. முயல்கள் விரைவாக ________________ .

புள்ளிகள்10

TEDC

## 4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

எ - கா

மாவீரர்நாள் ஆண்டுதோறும் நினைவு கூரப்படுகிறது.

( ஆண்டுதோறும், ஆன்டுதோறும் )

1. அதியர்மான் ஔவையாரை அரண்மனைக்கு ______________________ .

( அலைத்தார், அழைத்தார் )

2. மக்கள் பனிகாலத்தில் ______________________ அணிந்து செல்வர்.

( கையுறை, கையுரை )

3. சிறுவன் ______________________ நனைந்துகொண்டு விளையாடினான்.

( மழையில், மலையில் )

4. வெற்றி பெற்ற வீரனுக்குப் ______________________ வழங்கப்பட்டது.

( பறிசு, பரிசு )

5. ______________________ மகிழ்ச்சியைத் தரும்.

( இன்கலைகள், இன்களைகள் )

TEDC

புள்ளிகள் 05

## .5) சொற்களைப் பொருத்தமாக இணைக்குக.

எ - கா

| | | |
|---|---|---|
| பூக்களால் | அஞ்சல் | இருக்கும். |
| ஒளிநிலா | சுவையாக | செல்லும். |
| ஆடிக்கூழ் | மாலை | எழுதினாள். |
| மாட்டுவண்டி | உண்மை | தமிழீழம். |
| நாம் | தாயகம் | கட்டுவர். |
| தமிழரது | வீதியில் | பேசுவோம். |

TEDC

TEDC

புள்ளிகள் 10

**6) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| நான் | ~~அவன்~~ | அவர்கள் |
| அவை | நீங்கள் | அது |

**எ - கா**

பாரி ஒரு மன்னன். ___அவன்___ உயிர்களிடத்தில் அன்பு உள்ளவன்.

1. ஆசிரியர்கள் எங்களுக்கு நல்ல வழிகாட்டிகள். ______________ எங்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்றார்கள்.

2. வீதியில் உந்துகள் ஓடுகின்றன. அதனால் ______________ வீதியில் நின்று விளையாடாதீர்கள்.

3. திருக்குறள் சிறந்த அறநூல். ______________ திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

4. சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன சிறந்த காப்பியங்கள். ______________ தமிழருடைய பண்பாட்டு வரலாற்றைக் கூறுகின்றன.

5. எனது பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.______________ ஓட்டப்போட்டியில் பங்குபற்றினேன்.

புள்ளிகள் 10

TEDC

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

TEDC

எ - கா

சென் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இறை இல்லம் எது?

நொற்றடாம்

1. தமிழில் உள்ள மூன்று பிரிவுகளும் எவை?

______________________

2. வாழைமரங்கள் அதிகமாகக் காணப்படும் நாடுகள் எவை?

______________________

3. தரைவழியாகப் பாரமான பொருட்களை ஏற்றிச் செல்லும் உந்து எது?

______________________

4. எந்த விடுமுறைக்கு மக்கள் அதிகம் சுற்றுலாச் செல்வர்?

______________________

5. நல்வழி என்ற நூலை எழுதியவர் யார்?

______________________

TEDC

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

யாழ்ப்பாணத்தில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. தென்னவனின் தங்கை தென்றல். தென்னவனும் தென்றலும் பெற்றோருடன் கண்காட்சியைப் பார்க்கச் சென்றனர். அங்கே பல பொருட்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பனையோலையால் செய்யப்பட்ட கடகம், பாய், விசிறி போன்ற பொருட்கள் காணப்பட்டன. களிமண்ணால் செய்யப்பட்ட அடுப்பு, பானை, சட்டி போன்ற பொருட்களும் யானை, குதிரை போன்ற மரத்தினால் செய்யப்பட்ட உருவங்களும் காணப்பட்டன. அவற்றைப் பார்த்து அவர்கள் மகிழ்ந்தார்கள். தென்னவன் மரத்தினால் செய்யப்பட்ட யானை ஒன்றை வாங்கினான். பின்பு எல்லோரும் வீடு திரும்பினர்.

TEDC

(எ - கா)

கண்காட்சி எங்கே நடைபெற்றது?

<u>கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.</u>

1. தென்னவனின் தங்கையின் பெயர் என்ன?

_______________________________ .

2. தென்னவனும் தென்றலும் யாருடன் கண்காட்சியைப் பார்க்கச் சென்றனர்?

_______________________________ .

3. பனையோலையால் செய்யப்பட்ட பொருட்கள் எவை?

_______________________________ .

4. பானை, சட்டி என்பன எதனால் செய்யப்பட்டன?

_______________________________ .

TEDC

5. தென்னவன் வாங்கிய பொருள் என்ன?

_______________________________ .

புள்ளிகள் 10

**9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**



1. ______________________________________________

   ______________________________________________

2. ______________________________________________

   ______________________________________________

3. ______________________________________________

   ______________________________________________

4. ______________________________________________

   ______________________________________________

5. ______________________________________________

   ______________________________________________

புள்ளிகள் 15



TEDC